

POISONS INFORMATION CENTRE
நச்சுக்கள் தகவல் மையம்
Christian Medical College
collegedunia

# பாம்பு கடி

## உண்மைகளும்;தடுப்பு முறைகளும் (SNAKE BITES:FACTS, FIRST AID AND PREVENTION




நச்சுக்கள் தகவல் மையம்
சி.எம்.சி. மருத்துவமனை
POISONS INFORMATION CENTRE,CMC HOSPITAL

TOLL FREE No: 18004251213

Contact:+91 9655332290

# பாம்பு கடி குறித்து அறிந்து கொள்ள வேண்டியவைகள் :

- ஒரு வருடத்திற்கு கிராமப்புறங்களில் வாழும் 45000 இந்திய மக்கள் பாம்பு கடியினால் இறந்து போகிறார்கள்
- உலக அளவில் ஒரு நொடிக்கு 4 பேர் இறந்து போகிறார்கள்.
- இவர்களில் பெரும்பாலும் இளைஞர்கள் என்பது மிகவும் வருத்தத்திற்கு உரியது.
- பாம்பு கடிப்பதினால் நிகழும் மரணம் முழுமையாக தடுக்க கூடியது.

# பாம்பு கடிப்பதை எவ்வாறு தடுக்க முடியும் ?

- திறந்த வெளிகளில் நடக்கும் போது , கால்களில் காலணி அணிந்து செல்ல வேண்டும்
- இரவு நேரங்களில் நடக்கும் போது ,குறிப்பாக அதிக புற்கள் அல்லது புதர் நிறைத்த இடங்களில் விளக்கை தவறாமல் கொண்டு செல்லவும் .
- தரையில் படுத்து உறங்குவதை கூடுமானவரை தவிர்க்க வேண்டும்.அல்லது கொசு வலை போன்றவற்றை பயன்படுத்தி பாதுகாப்பாக உறங்க வேண்டும் .

# செய்யக்கூடாதவைகள்

- பாம்பு கடித்த இடத்தை கத்தி மற்றும் பிளேடு போன்றவற்றை கொண்டு கீர கூடாது .
- வாய் மூலமாக பாம்பு கடித்த இடத்தில் இரத்தத்தை உறிஞ்சி எடுக்க முயற்சி செய்ய்ய வேண்டாம்

- காபி , டீ, மற்றும் ஆல்கஹால் போன்றவைகளை குடிக்க கொடுக்க கூடாது.
- பாரம்பரிய அல்லது மூடநம்பிக்கைகளான மந்திரம் போடுதல், பச்சை இலைகளை வைத்து கட்டுதல் மற்றும் பாம்பு கடித்த இடத்தில் நெருப்பு வைப்பதை செய்ய கூடாது . இது போன்ற செயல்கள் நேரத்தை வீணாக்கி பாம்பு கடித்த நபரை ஆபத்தான நிலைக்கு கொண்டு செல்லும்

# பாம்பு கடியின் அறிகுறிகள்

- பாம்பு கடித்த இடத்தில் வலி
- பாம்பு கடித்த இடத்தில் பாம்பின் பல் அடையாளம்
- இரத்தப்போக்கு
- வாந்தி
- மயக்கம்
- பாம்பு கடித்த இடத்தில் வீக்கம் மற்றும் கொப்புளங்கள்
- கண் சொருகுதல்
- சுவாச பிரச்னை







# செய்ய வேண்டியவைகள்

- பாம்பினால் கடிபட்ட நபர் பதட்டம் (பயம்)அடையாமல் இருக்க வேண்டும்.
- பாம்பு கடித்த இடத்தை அசைக்காமல் இருப்பது விஷம் வேகமாக பரவுவதை தடுக்கும்
- பாம்பு கடித்த இடங்களில் வளையல்,மோதிரம் போன்ற அணிகலன்களை கழற்றி விடுவது நல்லது.
- பாம்பு கடித்த இடத்தை சுத்தமான பஞ்சு அல்லது சுத்தமான உலர்ந்த துணி கொண்டு இலேசாக துடைக்கவும்.( அழுத்தி துடைக்க கூடாது )

# உயிர் காக்கும் முறைகள்

- பாம்பு கடித்த உடன் காலம் தாழ்த்தாமல் அருகில் உள்ள பாம்பு விஷ முறிவு மருந்து கிடைக்கும் மருத்துவமனைக்கு செல்ல வேண்டும் .
- பாம்பு கடித்த உடன் சி.எம்.சி மருத்துவமனைக்கு (**நச்சுக்கள் தகவல் மையம்-POISONS INFORMATION CENTRE.CMC HOSPITAL** ) இலவச அழைப்பு எண்ணை(**TOLL FREE NO:18004251213**) பயன்படுத்தி தகவல் தெரிவிக்கவேண்டும்.
- பாம்பு கடி உள்ளிட்ட அனைத்து விஷத்துக்கும் இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது.

# அவசர உதவிக்கு

- **POISONS INFORMATION CENTRE (நச்சுக்கள் தகவல் மையம்) சி.எம்.சி .மருத்துவமனை CMC HOSPITAL**

**TOLL FREE NO: 18004251213(இலவச அழைப்பு எண்) 24×7**